# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. மெய்யெழுத்துகள்

அ) 30 ஆ) 7 இ) 12 ஈ) 18

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. ஆமையும் கொக்கும் வாழ்ந்து வந்த இடம் ________________.

அ) குளம் ஆ) கிணறு இ) ஆறு ஈ) நிலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தமிழர் ________________ உயிரினும் மேலாகப் போற்றுவர்.

அ) பணத்தை ஆ) ஒழுக்கத்தை இ) பொருளை ஈ) செல்வத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4 யாழ்ப்பாணத் தமிழரசின் கடைசி மன்னன்

அ) சங்கிலிகுமாரன் ஆ) பண்டாரவன்னியன்

இ) பரராசசேகரன் ஈ) செகராசசேகரன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. செதுக்குகிறான் என்பது

அ) இறந்தகாலம் ஆ) நிகழ்காலம் இ) எதிர்காலம் ஈ) முடிந்தகாலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பழமொழி :-

அடிமேல் ________________ அடித்தால் அம்மியும் நகரும்.

அ) தடி ஆ) அடி இ) வடி ஈ) படி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. மானமே பெரிதென உயிர்நீத்த மன்னன்

அ) செங்கணான் ஆ) குமணன் இ) இரும்பொறை ஈ) எல்லாளன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. போர்த்துக்கேயருக்கு அடிபணியாது இயற்கைக் காப்பரண்களைக் கொண்ட அரசு

அ) கண்டி அரசு ஆ) யாழ்ப்பாண அரசு

இ) கோட்டை அரசு ஈ) கரையோரச் சிங்கள அரசு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. **குறள்:-** கடனென்ப ________________ யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு

அ) நல்லவை ஆ) அல்லவை இ) வல்லவை ஈ) பல்லவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பின்வருவனவற்றுள் தன்மை இடத்தைக் குறிப்பது

அ. ~~ஆ)~~ நாங்கள் ஆ) நீங்கள் இ) அவர்கள் ஈ) அவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை ________க் கவிஞர்களில் சிறந்த கவிஞர்.

அ) 16ஆம் நூற்றாண்டு ஆ) 20ஆம் நூற்றாண்டு

இ) 18ஆம் நூற்றாண்டு ஈ) 17ஆம் நூற்றாண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. 'முத்தே பவளமே' எனத் தொடங்கும் பாடல்

அ) ஏர்ப்பாடல் ஆ) காதற்பாடல்

இ) தொழிற்பாடல் ஈ) தாலாட்டுப்பாடல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இரும்பாணி என்பதைப் பிரித்து எழுதினால்

ஆ) இரும் + ஆணி　　　ஆ) இரு + ஆணி

இ) இரும் + பாணி　　　ஈ) இரும்பு + ஆணி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

14. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் __________ .

அ) வெறுப்பு　ஆ) ஒறுப்பு　இ) சிறப்பு　ஈ) மறுப்பு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

15. உயர்திணைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நூல்　ஆ) புறா　இ) ஆடு　ஈ) வேடன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

16. வீரன் என்பதன் எதிர்ச்சொல்

அ) கோழை　ஆ) பகைவர்　இ) அறிஞர்　ஈ) ஏழை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

17. கண்ணாடி வில்லையைக் கண்டு பிடித்தவர்

அ) கலிலியோ　　　ஆ) மார்க்கோனி

இ) வன்லீவன்குக்　　　ஈ) மோர்சு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

18. கடையேழு வள்ளல்களில் ஒருவன்

அ) எல்லாளன்　　　ஆ) சங்கிலியன்

இ) பாரி　　　ஈ) இரும்பொறை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

19. சங்கிலியன் சிலை அமைந்துள்ள இடம்

அ) வவுனியா　　ஆ) முத்திரைச்சந்தி

இ) நீர்வேலி　　ஈ) வாழைச்சேனை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ஒரு பொருளின் செயலை உணர்த்துவது

அ) பெயர்ச்சொல்　　ஆ) உரிச்சொல்

இ) வினைச்சொல்　　ஈ) இடைச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. பாரி மகளிரைக் காப்பாற்றிய புலவர்

அ) ஔவையார்　ஆ) கபிலர்　இ) திருவள்ளுவர்　ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. யாழ்ப்பாணஅரசுக்கு முன்னர் பண்டைய தமிழரசு இருந்த இடங்கள்

அ) கதிரமலை, சேருவல　　ஆ) பூநகரி, புளியங்குளம்

இ) கதிரமலை, பூநகரி　　ஈ) கதிரமலை, மாதோட்டம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. தேசிகவிநாயகம்பிள்ளை ஆங்கில நூலைத் தழுவித் தமிழில் எழுதிய நூல்

அ) தேம்பாவணி　　ஆ) நாலடியார்

இ) திருக்குறள்　　ஈ) ஆசியசோதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. **சாந்தனையும் தீயனவே செய்திடினும்...** எனும் பாடல் வரி இடம் பெற்றநூல்

அ) திருக்குறள்　　ஆ) நீதிநெறி விளக்கம்

இ) மூதுரை　　ஈ) நல்வழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ஒன்றன்பாலுக்கு எடுத்துக்காட்டு

அ) மாறன் ஆ) அவன் இ) யானை ஈ) கிளிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. 'ஊக்கமும் உயர்ந்த உள்ளமும்' என்ற பாடத்தில் விடா முயற்சிக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்ட விலங்கு

அ) புலி ஆ) யானை இ) பன்றி ஈ) எலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. வானம் + வில் என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) வானம்வில் ஆ) வானவில் இ) வானவ்வில் ஈ) வான்வில்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. **புலவர்** என்ற சொல் குறிப்பது

அ) காவலரை ஆ) மறவரை இ) பாவல்ரை ஈ) உழவரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. மனுநீதிகண்ட சோழனுக்கு நிகராகக் குறிப்பிடப்பட்ட தமிழ் மன்னன்

அ) சங்கிலியன் ஆ) எல்லாளன் இ) சேனன் ஈ) குத்திகன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. **ஊக்கமது கைவிடேல்** என்று கூறியவர்

அ) கபிலர் ஆ) திருவள்ளுவர்

இ) காசிஆனந்தன் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

தேனீக்கள் குழுகாயப் பூச்சிகள். இவை கூட்டமாக வாழ்பவை. தேனீக்கள் சுறுசுறுப்பாக இயங்குபவை. தேனீக்கள் பூக்களில் இருந்து தேனைச் சேகரிக்கின்றன. தேனீக் கூட்டத்தில் இராணித்தேனீ, ஆண்தேனீக்கள், வேலைக்காரத் தேனீக்கள், போன்றவை உள்ளன. இராணித்தேனீ உருவத்தில் பெரியது. தேன்கூட்டில் ஒரேயொரு இராணித்தேனீ மட்டுமே இருக்கும். வேலைக்காரத் தேனீக்கள் மிகவும் சுறுசுறுப்பானவை. இவை தேனைச்சேகரித்தல், தேன்கூடுகட்டுதல், கூட்டைப்பாதுகாத்தல் போன்ற வேலைகளைச் செய்கின்றன. தேனீக்களைச் சுறுசுறுப்பு, கூட்டுமுயற்சி, போன்றவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர். தேனீவளர்ப்பு நல்ல பயன் தரும். மிகவும் சிறந்த மருத்துவ குணங்கொண்ட தேனைத் தேனீக்கள் எமக்குத் தருகின்றன.

1. குழுகாயப் பூச்சிகள் எவை?

______________________________

2. தேனீக்கள் எவற்றிலிருந்து தேனைச் சேகரிக்கின்றன?

______________________________

3. வேலைக்காரத் தேனீக்கள் செய்யும் வேலைகளில் இரண்டைத் தருக.

______________________________

4. தேனீக்களை எவற்றிற்கு எடுத்துக்காட்டாகக் கூறுவர்?

______________________________

5. தேனீக்கள் எமக்கு எதைத் தருகின்றன?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழில் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ஔவைக்கு நீலச் சிற்றாடையைக் கொடுத்து ஈரத்தைப் போக்கியவர்கள் யார்?

______________________________________________

______________________________________________

2. குமணமன்னனைக் காணச் சென்ற புலவர் யார்?

______________________________________________

3. ஒல்லாந்தருக்கும் ஆங்கிலேயருக்கும் அடிபணியாது ஆட்சிபுரிந்த அரசுகள் எவை?

______________________________________________

______________________________________________

4. 'மூட ஆமை' என்ற பாடத்தில் எவற்றைக் காத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறப்படுகிறது?

______________________________________________

______________________________________________

5. துட்டகெமுனு எல்லாள மன்னனை எவ்வாறு வெற்றி கொண்டான்?

______________________________________________

______________________________________________

6. தாயில் இனிய தமிழ் மொழியின் துயர் தாங்க மறப்பேனா எனக்கூறியவர் யார்?

______________________________________________

______________________________________________

7. போர்த்துக்கேயர் எவ்வாறு இலங்கையின் அரசியலுக்குள் நுழைந்தனர்?

______________________________________________

______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

# ஏற்றம்

| அஞ்சா | புகழ் | வள்ளலாய் | சேர்க்கும் | வீரனாய் |
|---|---|---|---|---|

அன்பு காட்டும் அன்னையாய்

ஆர்வம் ஊட்டும் தந்தையாய்

இனிமை ________________ தோழனாய்

ஈகைப் பண்பில் ________________

உறுதி கொண்ட மனத்தினனாய்

ஊக்கம் நிறைந்த மாந்தனாய்

எதற்கும் ________________ நெஞ்சினனாய்

ஏற்றம் காணும் ________________

ஒன்றுபட்டு உயர்ந்திடுவாய்

ஓங்கு ________________ கண்டிடுவாய்

புள்ளிகள் 10

5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. அ. இலக்கண வகையால் இடங்கள் எத்தனை வகைப்படும்?

________________________________________

ஆ. எடுத்துக்காட்டுத் தருக.

முன்னிலை : ______________________________

படர்க்கை : ______________________________

2. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

தனிச்சொல்லியம் :- ________________________

வினாச்சொல்லியம் :- ________________________

3. அ. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்?

ஆ. அவற்றுள் ஏதாவது இரண்டிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

________________________________________

________________________________________

4. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

________________________________________

________________________________________

5. பின்வரும் நிரற்கூட்டை நிரப்புக.

| சொல் | திணை | இடம் | காலம் |
|---|---|---|---|
| பாய்ந்தது | | | |
| வரைகின்றேன் | | | |

புள்ளிகள் 15

## 6) பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

The sea is blue in colour. The sea is very big. This world is surrounded by sea. There are big ships and small ships that sail on the sea. Many varieties of fish live in the sea. The fishermen go to the sea to catch fish. The sea helps us in many ways.

Das Meer ist blau. Das Meer ist sehr groß. Diese Welt ist umgeben von Meeren. Auf dem Meer fahren große und kleine Schiffe. Es leben viele Arten von Fischen im Meer. Fischer fahren auf das Meer und fischen Fische. Das Meer ist für uns in viele Arten hilfreich.

Havet er blå i farve. Havet er meget stort. Denne verden er omringet af hav. Der sejler store og små skibe på havet. Der lever mange forskellige fisk i havet. Fiskerne tager ud på havet for at fange fisk. Havet hjælper os på mange måder.

Il mare è di colore blu. Il mare è molto grande. La terra è circondata dal mare. Ci sono grandi e piccole navi che navigano nel mare. Molte varietàdi pesci vivono nel mare. I pescatori si recano/vanno al mare per pescare i pesci. Il mare ci aiuta in molti modi.

Jeg går til markedet med faren min. På markedet ser jeg grønnsaker og frukt. Faren min kjøper noen grønnsaker og litt frukt til oss. Jeg liker spinat. Jeg liker også å spise banan.

Havet är blåfärgat. Havet är väldigt stort. Denna planet är omgiven av hav. På havet seglar stora skepp och små skepp. Många sorters fiskar lever i havet. Fiskare går till havet och fiskar. Havet hjälper oss på många sätt.

de zee is blauw van kleur. De zee is erg groot. Deze wereld wordt omgeven door zee. Er zijn grote schepen en kleine schepen die varen op de zee. Vele soorten vissen leven in de zee. De vissers gaan naar de zee om vis te vangen. De zee helpt ons op vele manieren.

La mer est bleue. La mer est très grande. Le monde est entouré de mer. Il y a des petits et des grands bateaux qui traversent la mer. Plusieurs types de poissons vivent sous la mer. Les pécheurs vont sur la mer pour pécher. La mer nous vient en aide de différentes manières.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- யாழ்ப்பாணத் தமிழரசு
- எமது பெற்றோர்
- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை

புள்ளிகள் 20